ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஶிகன் அருளிய

ஸ்ரீ அபீதிஸ்தவம்

மஹாவித்வான் வில்லிவலம் ஸ்ரீ நாராயணாச்சார் ஸ்வாமி ஸாதித்த

விளக்கவுரையுடன்



ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் ஸந்நிதி
ராமகிருஷ்ணாபுரம், முத்தியால்பேட்டை, புதுச்சேரி-3.

Printed by Sri Mahalakshmi & Co., Cell:94441 58817

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஶிகன் அருளிய

ஸ்ரீ அபீதிஸ்தவம்

மஹாவித்வான் வில்லிவலம் ஸ்ரீ நாராயணாச்சார் ஸ்வாமி ஸாதித்த
விளக்கவுரையுடன்





ஸ்ரீ லக்ஷ்மீஸரஸ் மாருதி

ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்

ராமகிருஷ்ணா நகர், புதுச்சேரி-3.
Phone : 0413 - 2260096

தொகுப்பு : S. வாஸுதேவன், 94453 90591

அவதாரிகை

ஸ்ரீ அபீதிஸ்தவம்

மற்ற ஸ்தோத்திரங்கள் போலல்லாது இந்த ஸ்தோத்திரம் ஸ்ரீஸ்வாமி தேஶிகனால் ஓர் அஸாதாரணமான நிலையில் அருளிச் செய்யப்பெற்றது. ஸ்ரீரங்கநாதனை விட்டுப் பிரிந்து மேல் நாட்டில் எழுந்தருளியிருந்த ஸமயம், திருவரங்கத்தில் முகலாயர் படையெடுப்பில் மூலபேரத்துக்குக் கல்திரை இடப்பட்டது. உத்ஸவர் திருமலைக்கு எழுந்தருளிவிட்டார். ஸ்ரீஶ்ருதப்ரகாசிகாசார் போன்ற முதிய ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள் அந்தப் படையெடுப்பினால் பரமபதித்தனர். ஆக இவ்வித இக்கட்டான ஸமயத்தில் இந்தக் கஷ்டமெல்லாம் தீரும்படி ஸ்ரீ ஸ்வாமி தே.ஶிகன் அழகிய மணவாளனை ஸ்தோத்திருக்கிறார் இதில். அச்சம் தீரும்படிக்கான, ஸ்தவம் என்பது இந்த பெயரின் பொருள்.

இன்றைய காலகட்டத்தில் கலிகால கோரதாண்டவத்தின் தாக்கத்தை நம் நாட்டில் கண்கூடாக தினமும் கண்டு, அறிந்து தாங்கொணாத துயரம் அனுபவித்து வருகிறோம். ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஶிகனின் வேறெங்குமே காண இயலாத தனித்தன்மை பெற்ற "ஸ்ரீ அபீதிஸ்தவம்" நம் பயங்களை உடனே போக்கவல்லது; ஸாமான்ய ஜனங்களும் ஸுலபமாக இந்த 29 ஸ்லோகங்களைப் படித்து, துன்பங்கள், துயரங்கள், பயங்கள் நீங்கப் பெற்று பெண்கள் உள்பட ஜாதி இன பேதமின்றி ஸ்ரீ காயத்ரி மந்திர ஜப பலனை இந்த ஸ்தோத்ரத்தின் மூலம் பெறலாம். வேதத்தின் ஆத்மாவாகிய, ப்ரம்ம தேஜஸைத் தரக்கூடிய 28 காயத்ரி மந்திரத்தின் பீஜாக்ஷரங்கள் இந்த துதியில் மறைந்து உள்ளன என்பது பெரியோர் நிர்வாஹம். ஸ்ரீரங்கநாதனே வாக்குத்தவறாத ஸ்ரீராம அவதாரம் எடுத்தவர். ஶரணாகதனுடைய ப்ரேமை எங்கு பங்கப்பட்டுவிடுமோ என அச்சம் கொண்டவர்; விஷ்ணுதாஸர்களின் திருவுள்ளம் கலங்க ஸஹிக்கமாட்டாத காருணிகர். இந்த துதியை யாவரும் பாராயணம் செய்து கலிகாலுஷ்யம், பயம் இவற்றினின்று நிவாரணம் பெற்று பரஸ்பர நல்லெண்ணமுள்ள உறவினர், நண்பர், அலுவலகத்தோர் இவர்கள் நடுவில் நிம்மதியாக வாழ வேண்டப்படுகின்றனர். எம்பெருமானின் திருநாமத்தைப் பேசக் கற்றவர்களுக்கு நரகபாத அச்சமானது நெருங்காது என்கிறார் இதில். மஹாவித்வான் வில்லிவலம் ஸ்ரீ நாராயணாச்சார் ஸ்வாமி ஸாதித்த அதியத்புதமான விளக்கவுரையை நன்றியுடன், வணக்கத்துடன், பணிவுடன் இந்நூலில் இணைப்பதில் பெருமை கொள்கிறோம்.

– ஸ்ரீமதி விஷ்ணுப்ரியா சாரி

श्रीः

श्रीमते रामानुजाय नमः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

॥ श्री-अभीतिस्तवः ॥

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि॥

अभीतिरिह यज्जुषां यदवधीरितानां भयं
भयाभय विधायिनो जगति यन्निदेशे स्थिताः।
तदेतदतिलङ्घित द्रुहिण शम्भु शक्रादिकं
रमासखमधीमहे किमपि रङ्गधुर्यं महः॥ १॥

दया शिशिरिताशया मनसि मे सदा जागृयुः
श्रियाऽध्युषित वक्षसः श्रित मरुद् वृधा सैकताः।
जगद्दुरित घस्मरा जलधि डिम्भ डम्भस्पृशः
सकृत्प्रणत रक्षण प्रथित संविदः संविदः॥ २॥

यदद्य मित बुद्धिना बहुल मोह भाजा मया
गुण ग्रथित काय वाङ्मनस वृत्ति वैचित्र्यतः।
अतर्कित हिताहित क्रम विशेषमारभ्यते
तदप्युचितमर्चनं परिगृहाण रङ्गेश्वर॥ ३॥

मरुत्तरणि पावक त्रिदश नाथ कालादयः
स्वकृत्यमधिकुर्वते त्वदपराधतो बिभ्यतः।
महत् किमपि वज्रमुद्यतमिवेति यच्छ्रूयते
तरत्यनघ तद्भयं य इह तावकः स्तावकः॥ ४॥

भवन्तमिह यः स्व धी नियत चेतनाचेतनं
पनायति नमस्यति स्मरति वक्ति पर्येति वा।
गुणं कमपि वेत्ति वा तव गुणेश गोपायितुः
कदाचन कुतश्चन क्वचन तस्य न स्यात् भयम्॥ ५॥

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

॥ ஶ்ரீ-அபீ4திஸ்தவ: ॥

ஶ்ரீமாந் வேங்கடநாத2ார்ய: கவிதார்கிககேஸரீ ।
வேத3ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸத3ா ஹ்ருதி3 ॥

அபீ4திரிஹ யஜ்ஜுஷாம் யத3வதீ4ரிதாநாம் ப4யம்
ப4யாப4ய விதா4யிநோ ஜக3தி யந்நிதே3ஶே ஸ்தி2தா: ।
ததே3தத3திலங்கி4த த்3ருஹிண ஶம்பு4 ஶக்ராதி3கம்
ரமாஸக2மதீ4மஹே கிமபி ரங்க3து4ர்யம் மஹ: ॥ 1 ॥

த3யா ஶிஶிரிதாஶயா மநஸி மே ஸத3ா ஜாக்3ருயு:
ஶ்ரியாऽத்4யுஷித வக்ஷஸ: ஶ்ரித மருத்3 வ்ருத4ா ஸைகதா: ।
ஜக3த்3து3ரித க4ஸ்மரா ஜலதி4 டி3ம்ப4 ட3ம்ப4ஸ்ப்ருஶ:
ஸக்ருத்ப்ரணத ரக்ஷண ப்ரதி2த ஸம்வித3: ஸம்வித3: ॥ 2 ॥

யத3த்3ய மித பு3த்3தி4நா ப3ஹுள மோஹ ப4ாஜா மயா
கு3ண க்3ரதி2த காய வாங்மநஸ வ்ருத்தி வைசித்ர்யத: ।
அதர்கித ஹிதாஹித க்ரம விஶேஷமாரப்4யதே
தத3ப்யுசிதமர்சநம் பரிக்3ருஹாண ரங்கே3ஶ்வர ॥ 3 ॥

மருத்தரணி பாவக த்ரித3ஶ நாத2 காலாத3ய:
ஸ்வக்ருத்யமதி4குர்வதே த்வத3பராத4தோ பி3ப்4யத: ।
மஹத் கிமபி வஜ்ரமுத்3யதமிவேதி யச்ச்2ரூயதே
தரத்யநக4 தத்3ப4யம் ய இஹ தாவக: ஸ்தாவக: ॥ 4 ॥

ப4வந்தமிஹ ய: ஸ்வ தீ4 நியத சேதநாசேதநம்
பநாயதி நமஸ்யதி ஸ்மரதி வக்தி பர்யேதி வா ।
கு3ணம் கமபி வேத்தி வா தவ கு3ணேஶ கோ3பாயிது:
கத3ாசந குதஶ்சந க்வசந தஸ்ய ந ஸ்யாத் ப4யம் ॥ 5 ॥

स्थिते मनसि विग्रहे गुणिनि धातु साम्ये सति
स्मरेदखिल देहिनं य इह जातुचित् त्वामजम्।
तयैव खलु संधया तमथ दीर्घ निद्रावशं
स्वयं विहित संस्मृतिर्नयसि धाम नैःश्रेयसम्॥ ६॥

रमादयित रङ्गभूरमण कृष्ण विष्णो हरे
त्रिविक्रम जनार्दन त्रियुग नाथ नारायण।
इतीव शुभदानि यः पठति नामधेयानि ते
न तस्य यम वश्यता नरक पात भीतिः कुतः॥ ७॥

कदाचिदपि रङ्गभू रसिक यत्र देशे वशी
त्वदेक नियताशयस्त्रिदश वन्दितो वर्तते।
तदक्षत तपोवनं तव च राजधानी स्थिरा
सुखस्य सुखमास्पदं सुचरितस्य दुर्गं महत्॥ ८॥

त्रिवर्ग पथ वर्तिनां त्रिगुण लङ्घनोद्योगिनां
द्विषत्प्रमथनार्थिनामपि च रङ्ग दृश्योदयाः।
स्खलत्समय कातरी हरण जागरूकाः प्रभो
कर ग्रहण दीक्षिताः क इव ते न दिव्या गुणाः॥ ९॥

बिभेति भवभृत् प्रभो त्वदुपदेश तीव्रौषधात्
कदध्व रस दुर्विषे बलिश भक्षवत् प्रीयते।
अपथ्य परिहार धी विमुखमित्थमाकस्मिकी
तमप्यवसरे क्रमादवति वत्सला त्वद्दया॥ १०॥

अपार्थ इति निश्चितः प्रहरणादि योगस्तव
स्वयं वहसि निर्भयस्तदपि रङ्ग पृथ्वीधर।
स्वरक्षणमिवाभवत् प्रणत रक्षणं तावकं
यदात्थ परमार्थविन्नियतमन्तरात्मेति ते॥ ११॥

लघिष्ठ सुख सङ्गदैः स्वकृत कर्मनिर्वर्तितैः
कळत्र सुत सोदरानुचर बन्धु संबन्धिभिः।

ஸ்தி2தே மநஸி விக்3ரஹே கு3ணிநி தா4து ஸாம்யே ஸதி
ஸ்மரேத3கி2ல தே3ஹிநம் ய இஹ ஜாதுசித் த்வாமஜம் ।
தயைவ க2லு ஸந்த4யா தமத2 தீ3ர்க4 நித்3ராவஶம்
ஸ்வயம் விஹித ஸம்ஸ்ம்ருதிர்நயஸி தா4ம நை:ஶ்ரேயஸம் ॥ 6 ॥

ரமாத3யித ரங்க3பூ4ரமண க்ருஷ்ண விஷ்ணோ ஹரே
த்ரிவிக்ரம ஜநார்த3ந த்ரியுக3 நாத2 நாராயண ।
இதீவ ஶுப4தா3நி ய: பட2தி நாமதே4யாநி தே
ந தஸ்ய யம வஶ்யதா நரக பாத பீ4தி: குத: ॥ 7 ॥

கதா3சித3பி ரங்க3பூ4 ரஸிக யத்ர தே3ஶே வஶீ
த்வதே3க நியதாஶயஸ்த்ரித3ஶ வந்தி3தோ வர்ததே ।
தத3க்ஷத தபோவநம் தவ ச ராஜதா4நீ ஸ்தி2ரா
ஸுக2ஸ்ய ஸுக2மாஸ்பத3ம் ஸுசரிதஸ்ய து3ர்க3ம் மஹத் ॥ 8 ॥

த்ரிவர்க3 பத2 வர்திநாம் த்ரிகு3ண லங்க4நோத்3யோகி3நாம்
த்3விஷத்ப்ரமத2நார்தி2நாமபி ச ரங்க3 த்3ருஶ்யோத3யா: ।
ஸ்க2லத்ஸமய காதரீ ஹரண ஜாக3ரூகா: ப்ரபோ4
கர க்3ரஹண தீ3க்ஷிதா: க இவ தே ந தி3வ்யா கு3ணா: ॥ 9 ॥

பி3பே4தி ப4வப்4ருத் ப்ரபோ4 த்வது3பதே3ஶ தீவ்ரௌஷதா4த்
கத3த்4வ ரஸ து3ர்விஷே ப3லிஶ ப4க்ஷவத் ப்ரீயதே ।
அபத்2ய பரிஹார தீ4 விமுக2மித்த2மாகஸ்மிகீ
தமப்யவஸரே க்ரமாத3வதி வத்ஸலா த்வத்3த3யா ॥ 10 ॥

அபார்த2 இதி நிஶ்சித: ப்ரஹரணாதி3 யோக3ஸ்தவ
ஸ்வயம் வஹஸி நிர்ப4யஸ்தத3பி ரங்க3 ப்ருத்2வீத4ர ।
ஸ்வரக்ஷணமிவாப4வத் ப்ரணத ரக்ஷணம் தாவகம்
யதா3த்த2 பரமார்த2விந்நியதமந்தராத்மேதி தே ॥ 11 ॥

லகி4ஷ்ட2 ஸுக2 ஸங்க3தை3: ஸ்வக்ருத கர்மநிர்வர்திதை:
களத்ர ஸுத ஸோத3ராநுசர ப3ந்து4 ஸம்ப3ந்தி4பி4: ।

धन प्रभृतिकैरपि प्रचुर भीति भेदोत्तरैः
न बिभ्रति धृतिं प्रभो त्वदनुभूति भोगार्थिनः॥ १२ ॥

न वक्तुमपि शक्यते नरक गर्भ वासादिकं
वपुश्च बहु धातुकं निपुण चिन्तने तादृशम्।
त्रिविष्टप मुखं तथा तव पदस्य देदीपतः
किमत्र न भयास्पदं भवति रङ्ग पृथ्वीपते॥ १३ ॥

भवन्ति मुख भेदतो भय निदानमेव प्रभो
शुभाशुभ विकल्पिता जगति देश कालादयः।
इति प्रचुरसाध्वसे मयि दयिष्यसे त्वं न चेत्
क इत्थमनुकम्पिता त्वदनुकम्पनीयश्च कः॥ १४ ॥

सकृत् प्रपदन स्पृशामभय दान नित्यव्रती
न च द्विरभिभाषसे त्वमिति विश्रुतः स्वोक्तितः।
यथोक्त करणं विदुस्तव तु यातुधानादयः
कथं वितथमस्तु तत् कृपण सार्वभौमे मयि॥ १५ ॥

अनुक्षण समुत्थिते दुरित वारिधौ दुस्तरे
यदि क्वचन निष्कृतिर्भवति साऽपि दोषाविला।
तदित्थमगतौ मयि प्रतिविधानमाधीयतां
स्वबुद्धि परिकल्पितं किमपि रङ्गधुर्य त्वया॥ १६ ॥

विषाद बहुळादहं विषय वर्गतो दुर्जयात्
बिभेमि वृजिनोत्तरस्त्वदनुभूति विच्छेदतः।
मया नियत नाथवानयमिति त्वमर्थापयन्
दयाधन जगत्पते दयित रङ्ग संरक्ष माम्॥ १७ ॥

निसर्ग निरनिष्टता तव निरंहसः श्रूयते
ततस्त्रियुग सृष्टिवत् भवति संहृतिः क्रीडितम्।
तथाऽपि शरणागत प्रणय भङ्ग भीतो भवान्
मदिष्टमिह यद्भवेत् किमपि मा स्म तज्जीहपत्॥ १८ ॥

த4ந ப்ரப்4ருதிகைரபி ப்ரசுர பீ4தி பே4தே3ாத்தரை:
ந பி3ப்4ரதி த்4ருதிம் ப்ரபே4ா த்வத3நுபூ4தி பே4ாக3ார்தி2ந: ॥ 12 ॥

ந வக்துமபி ஶக்யதே நரக க3ர்ப4 வாஸாதி3கம்
வபுஶ்ச ப3ஹு தா4துகம் நிபுண சிந்தநே தாத்3ருஶம் ।
த்ரிவிஷ்டப முக2ம் தத2ா தவ பத3ஸ்ய தே3தீ3பத:
கிமத்ர ந ப4யாஸ்பத3ம் ப4வதி ரங்க3 ப்ருத்2வீபதே ॥ 13 ॥

ப4வந்தி முக2 பே4த3தோ ப4ய நித3ாநமேவ ப்ரபே4ா
ஶுபா4ஶுப4 விகல்பிதா ஜக3தி தே3ஶ காலாத3ய: ।
இதி ப்ரசுரஸாத்4வஸே மயி த3யிஷ்யஸே த்வம் ந சேத்
க இத்த2மநுகம்பிதா த்வத3நுகம்பநீயஶ்ச க: ॥ 14 ॥

ஸக்ருத் ப்ரபத3ந ஸ்ப்ருஶாமப4ய த3ாந நித்யவ்ரதீ
ந ச த்3விரபி4பா4ஷஸே த்வமிதி விஶ்ருத: ஸ்வோக்தித: ।
யதே2ாக்த கரணம் விது3ஸ்தவ து யாதுதா4நாத3ய:
கத2ம் விதத2மஸ்து தத் க்ருபண ஸார்வபௌ4மே மயி ॥ 15 ॥

அநுக்ஷண ஸமுத்தி2தே து3ரித வாரிதௌ4 து3ஸ்தரே
யதி3 க்வசந நிஷ்க்ருதிர்ப4வதி ஸாऽபி தே3ாஷாவிலா ।
ததி3த்த2மக3தௌ மயி ப்ரதிவிதா4நமாதீ4யதாம்
ஸ்வபு3த்3தி4 பரிகல்பிதம் கிமபி ரங்க3து4ர்ய த்வயா ॥ 16 ॥

விஷாத3 ப3ஹுளாத3ஹம் விஷய வர்க3தோ து3ர்ஜயாத்
பி3பே4மி வ்ருஜிநோத்தரஸ்த்வத3நுபூ4தி விச்சே2த3த: ।
மயா நியத நாத2வாநயமிதி த்வமர்த2ாபயந்
த3யாத4ந ஜக3த்பதே த3யித ரங்க3 ஸம்ரக்ஷ மாம் ॥ 17 ॥

நிஸர்க3 நிரநிஷ்டதா தவ நிரம்ஹஸ: ஶ்ரூயதே
ததஸ்த்ரியுக3 ஸ்ருஷ்டிவத் ப4வதி ஸம்ஹ்ருதி: க்ரீடி3தம் ।
தத2ாऽபி ஶரணாக3த ப்ரணய ப4ங்க3 பீ4தோ ப4வாந்
மதி3ஷ்டமிஹ யத்3ப4வேத் கிமபி மா ஸ்ம தஜ்ஜீஹபத் ॥ 18 ॥

कयाधुसुत वायस द्विरदपुङ्गव द्रौपदी-
विभीषण भुजङ्गम व्रजगणाम्बरीषादयः।
भवत्पद समाश्रिता भय विमुक्तिमापुर्यथा
लभेमहि तथा वयं सपदि रङ्गनाथ त्वया॥ १९ ॥

भयं शमय रङ्गधाम्नयनितराभिलाष स्पृशां
श्रियं बहुळय प्रभो श्रित विपक्षमुन्मूलय।
स्वयं समुदितं वपुस्तव निशामयन्तः सदा
वयं त्रिदश निर्वृतिं भुवि मुकुन्द विन्देमहि॥ २० ॥

श्रियः परिबृढे त्वयि श्रित जनस्य संरक्षके
सदद्भुत गुणोदधाविति समर्पितोऽयं भरः।
प्रतिक्षणमतः परं प्रथय रङ्गधामादिषु
प्रभुत्वमनुपाधिकं प्रथित हेतिभिर्हेतिभिः॥ २१ ॥

कलि प्रणिधि लक्षणैः कलित शाक्य लोकायतैः
तुरुष्क यवनादिभिर्जगति जृम्भमाणं भयम्।
प्रकृष्ट निजशक्तिभिः प्रसभमायुधैः पञ्चभिः
क्षिति त्रिदश रक्षकैः क्षपय रङ्गनाथ क्षणात्॥ २२ ॥

दिति प्रभवदेहभिद्दहन सोम सूर्यात्मकं
तमःप्रमथनं प्रभो समुदितास्त्र बृन्दं स्वतः।
स्ववृत्ति वश वर्तित त्रिदश वृत्ति चक्रं पुनः
प्रवर्तयतु धाम्नि ते महति धर्म चक्र स्थितिम्॥ २३ ॥

मनु प्रभृति मानिते महति रङ्ग धामादिके
दनु प्रभव दारुणैर्दरमुदीर्यमाणं परैः।
प्रकृष्ट गुणक श्रिया वसुधया च सन्धुक्षितः
प्रयुक्तकरुणोदधिः प्रशमय स्वशक्त्या स्वयम्॥ २४ ॥

भुजङ्गम विहङ्गम प्रवर सैन्यनाथाः प्रभो
तथैव कुमुदादयो नगर गोपुर द्वारपाः।

கயாது4ஸுத வாயஸ த்3விரத3புங்க3வ த்3ரௌபதீ3-
விபீ4ஷண பு4ஜங்க3ம வ்ரஜக3ணாம்ப3ரீஷாத3ய: ।
ப4வத்பத3 ஸமாஶ்ரிதா ப4ய விமுக்திமாபுர்யதா2
லபே4மஹி தத2ா வயம் ஸபதி3 ரங்க3நாத2 த்வயா ॥ 19 ॥

ப4யம் ஶமய ரங்க3தா4ம்ந்யநிதராபி4லாஷ ஸ்ப்ருஶாம்
ஶ்ரியம் ப3ஹுளய ப்ரபே4ா ஶ்ரித விபக்ஷமுந்மூலய ।
ஸ்வயம் ஸமுதி3தம் வபுஸ்தவ நிஶாமயந்த: ஸதா3
வயம் த்ரித3ஶ நிர்வ்ருதிம் பு4வி முகுந்த3 விந்தே3மஹி ॥ 20 ॥

ஶ்ரிய: பரிப்3ருடே4 த்வயி ஶ்ரித ஜநஸ்ய ஸம்ரக்ஷகே
ஸத3த்3பு4த கு3ணோத3தா4விதி ஸமர்பிதோऽயம் ப4ர: ।
ப்ரதிக்ஷணமத: பரம் ப்ரத2ய ரங்க3தா4மாதி3ஷு
ப்ரபு4த்வமநுபாதி4கம் ப்ரதி2த ஹேதிபி4ர்ஹேதிபி4: ॥ 21 ॥

கலி ப்ரணிதி4 லக்ஷணை: கலித ஶாக்ய லோகாயதை:
துருஷ்க யவநாதி3பி4ர்ஜக3தி ஜ்ரும்ப4மாணம் ப4யம் ।
ப்ரக்ருஷ்ட நிஜஶக்திபி4: ப்ரஸப4மாயுதை4: பஞ்சபி4:
க்ஷிதி த்ரித3ஶ ரக்ஷகை: க்ஷபய ரங்க3நாத2 க்ஷணாத் ॥ 22 ॥

தி3தி ப்ரப4வதே3ஹபி4த்3த3ஹந ஸோம ஸூர்யாத்மகம்
தம:ப்ரமத2நம் ப்ரபே4ா ஸமுதி3தாஸ்த்ர ப்3ருந்த3ம் ஸ்வத: ।
ஸ்வவ்ருத்தி வஶ வர்தித த்ரித3ஶ வ்ருத்தி சக்ரம் புந:
ப்ரவர்தயது தா4ம்நி தே மஹதி த4ர்ம சக்ர ஸ்தி2திம் ॥ 23 ॥

மநு ப்ரப்4ருதி மாநிதே மஹதி ரங்க3 தா4மாதி3கே
த3நு ப்ரப4வ தா3ருணைர்த3ரமுதீ3ர்யமாணம் பரை: ।
ப்ரக்ருஷ்ட கு3ணக ஶ்ரியா வஸுதா4யா ச ஸந்து4க்ஷித:
ப்ரயுக்தகருணோத3தி4: ப்ரஶமய ஸ்வஶக்த்யா ஸ்வயம் ॥ 24 ॥

பு4ஜங்க3ம விஹங்க3ம ப்ரவர ஸைந்யநாதா2: ப்ரபே4ா
ததை2வ குமுதா3தா3யோ நக3ர கோ3புர த்3வாரபா: ।

अचिन्त्य बल विक्रमास्त्वमिव रङ्ग संरक्षकाः
जितं त इति वादिनो जगदनुग्रहे जाग्रतु॥ २५ ॥

विधिस्त्रिपुरमर्दनस्त्रिदशपुङ्गवः पावकः
यम प्रभृतयोऽपि यद्विमत रक्षणे न क्षमाः।
रिरक्षिषति यत्र च प्रतिभयं न किञ्चित् क्वचित्
स नः प्रतिभटान् प्रभो शमय रङ्गधामादिषु॥ २६ ॥

स कैटभ तमो रविर्मधु पराग झञ्झामरुत्
हिरण्य गिरि दारणस्त्रुटित कालनेमि द्रुमः।
किमत्र बहुना भजद्भव पयोधि मुष्टिन्धयः
त्रिविक्रम भवत्क्रमः क्षिपतु मङ्क्षु रङ्गद्विषः॥ २७ ॥

यति प्रवर भारती रस भरेण नीतं वयः
प्रफुल्ल पलितं शिरः परमिह क्षमं प्रार्थये।
निरस्त रिपुसंभवे क्वचन रङ्गमुख्ये विभो
परस्पर हितैषिणां परिसरेषु मां वर्तय॥ २८ ॥

प्रबुद्ध गुरु वीक्षण प्रथित वेङ्कटेशोद्भवाम्
इमामभयसिद्धये पठत रङ्गभर्तुः स्तुतिम्।
भयं त्यजत भद्रमित्यभिदधत् स वः केशवः
स्वयं घन घृणा निधिर्गुणगणेन गोपायति॥ २९ ॥

॥ इति श्री-अभीतिस्तवः समाप्तः ॥

कवितार्किकसिंहाय कल्याणगुणशालिने।
श्रीमते वेङ्कटेशाय वेदान्तगुरवे नमः॥

அசிந்த்ய ப3ல விக்ரமாஸ்த்வமிவ ரங்க3 ஸம்ரக்ஷகா:
ஜிதம் த இதி வாதி3நோ ஜக3த3நுக்3ரஹே ஜாக்3ரது॥ 25 ॥

விதி4ஸ்த்ரிபுரமர்த3நஸ்த்ரித3ஶபுங்க3வ: பாவக:
யம ப்ரப்4ருதயோऽபி யத்3விமத ரக்ஷணே ந க்ஷமா: ।
ரிரக்ஷிஷதி யத்ர ச ப்ரதிப4யம் ந கிஞ்சித் க்வசித்
ஸ ந: ப்ரதிப4டாந் ப்ரபோ4 ஶமய ரங்க3தா4மாதி3ஷு॥ 26 ॥

ஸ கைடப4 தமோ ரவிர்மது4 பராக3 ஜ2ஞ்ஜ2ாமருத்
ஹிரண்ய கி3ரி தா3ரணஸ்த்ருடித காலநேமி த்3ரும: ।
கிமத்ர ப3ஹுநா ப4ஜத்3ப4வ பயோதி4 முஷ்டிந்த4ய:
த்ரிவிக்ரம ப4வத்க்ரம: க்ஷிபது மங்க்ஷு ரங்க3த்3விஷ: ॥ 27 ॥

யதி ப்ரவர ப4ாரதீ ரஸ ப4ரேண நீதம் வய:
ப்ரபு2ல்ல பலிதம் ஶிர: பரமிஹ க்ஷமம் ப்ரார்த2யே ।
நிரஸ்த ரிபுஸம்ப4வே க்வசந ரங்க3முக்2யே விபோ4
பரஸ்பர ஹிதைஷிணாம் பரிஸரேஷு மாம் வர்தய ॥ 28 ॥

ப்ரபு3த்3த4 கு3ரு வீக்ஷண ப்ரதி2த வேங்கடேஶோத்3ப4வாம்
இமாமப4யஸித்3த4யே பட2த ரங்க3ப4ர்து: ஸ்துதிம் ।
ப4யம் த்யஜத ப4த்3ரமித்யபி4த3த4த் ஸ வ: கேஶவ:
ஸ்வயம் க4ந க்4ருணா நிதி4ர்கு3ணக3ணேந கோ3பாயதி ॥ 29 ॥

॥ இதி ஶ்ரீ-அபீ4திஸ்தவ: ஸம்பூர்ண: ॥

கவிதார்கிகஸிம்ஹாய கல்யாணகு3ணஶாலிநே ।
ஶ்ரீமதே வேங்கடேஶாய வேத3ாந்த கு3ரவே நம: ॥

ஸ்ரீ அபீதிஸ்தவம் - விளக்கவுரை

1. எதை அண்டினவர் பயமற்று வாழ்வரோ, எதனால் நிராகரிக்கப்பட்டவர் பயமுற்று நஶிப்பரோ, உலகில் அபயமளிப்பவர்களாகவும் பயமுறுத்துபவர்களாகவும் பிரஸித்தமான அனைவரும் உண்மையில் எதனுடைய கட்டளைப்படி நடந்து அவ்விதம் பிரஸித்தி பெற்றனரோ, ப்ரஹ்ம ருத்ரேந்த்ராதிகளுக்கும் மேம்பட்ட, பிராட்டியுடன் பிரியாத, ஸ்ரீரங்கத்தின் ஸ்வாமியாக உள்ள அத்தகைய ஓர் ஜ்யோதிஸ்ஸை நாம் நினைப்போம்.

2. கருணையினால் உள்ளங்குளிர்ந்தவையாகவும், பெரிய பிராட்டியாரை மார்பில் கொண்டவையாகவும், காவிரியின் இடைப்பட்ட மணல் திட்டில் நித்யவாஸம் செய்பவையாகவும், உலகின் பாவங்களைப் போக்குபவையாகவும், சிறிய கடல் போல் கம்பீரமானவையாகவும், சரணமடைந்தவரைக் காப்பதில் உறுதி கொண்டவையாகவும் இருக்கும், ஸ்ரீரங்கநாதரின் தோற்றங்கள் என் மனத்தில் எப்போதும் இருக்கட்டும்.

3. சிற்றறிவினனாகவும் மயல் மிகுந்தவனாகவும் உள்ள என்னாலே, முக்குணமயமான மநோ, வாக், காயங்கள் என்னும் த்ரிகரணங்களின் விசித்திர ப்ரேரணையைக் கொண்டு, நன்மை தீமைகள் ஒன்றும் ஆராயாமல், இப்போது இந்தத் துதி செய்யப்பெறுகிறது. அதையும் உனக்கு ஓர் ஆராதனமாக நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்.

4. வாயு, ஸூர்யன், அக்னி, இந்திரன், யமன் முதலிய தேவர்களும் உனக்கு அபசாரம் செய்யப் பயந்து, பெரியதொரு வஜ்ராயுதம் தங்களை நோக்கி ஓங்கப்பட்டது போல, தம் தம் கடமைகளை ஆற்றுகிறார்கள் என்று எந்தப் பயம் உபநிஷத்துக்களில் ஓதப்பட்டுள்ளதோ, அந்தப் பயத்தை, குற்றமற்றவனே! உன்னைத் துதிப்பவன் நொடியில் கடந்து விடுகிறான்.

5. உனது ஸங்கல்பத்துக்கு இட்ட வழக்கான சேதநாசேதநங்களைப் படைத்தவனாகிய உன்னை எவன் துதிக்கிறானோ, வணங்குகிறானோ, நினைக்கிறானோ, சொல்லுகிறானோ, அணுகுகிறானோ, அல்லது - குணக்கடலே! காப்பாளனாகிய உன்னுடைய ஓர் குணலேஶத்தையாவது அறிகிறானோ, அவனுக்கு எப்போதும் எங்கும் எதனிடமிருந்தும் துளிப் பயமும் இல்லை.

6. மனம் ஸ்திரமாக இருக்கும்போது, ஶரீரமும் வாத பித்தாதிகளான தாதுக்களும் நல்லபடி நடக்கும்போது, எவனொருவன், நித்யனாகிய

ஜகத் அந்தராத்மாவாகிய, உன்னை நினைக்கிறானோ, அவனை அந்த நினைப்பே காரணமாக, அவனுடைய அந்திமப்ரயாண ஸமயத்திலும் உன்னை நினைக்கும்படி செய்வித்து வைகுண்டத்தை அடைவிக்கிறாய் நீ.

7. 'ஶ்ரிய: பதியே, அரங்கத்தரசே, கண்ணா, விஷ்ணோ, ஹே ஹரே, திரிவிக்ரம, ஜநார்த்தன, ஜ்ஞாநாதிகளான ஆறுகுணத்தோனே, ஹேநாத, நாராயணா!' என்பவை போன்ற நன்மை தரும் திருநாமங்களை எவனொருவன் உச்சரிக்கிறானோ அவன் நமனுடைய (எமனுடைய) ஆளுகைக்கு உட்பட்டவனல்லன். நரகத்திலே அவன் வீழ்வதென்பது ஏது?

8. ஸ்ரீரங்கவாஸ ரஸிகனே! எந்த ஓர் இடத்தில் ஒரு ஸமயமாவது, புலன்களை வென்ற புண்ணியாத்மாவாகிய, உன் பக்தன் ஒருவன், தேவர்கள் கொண்டாடும்படி வஸிக்கிறானோ, அந்த இடம்தான் உயர்ந்த தபோவனம்; உன் உறுதியான தலைநகர்; இன்பத்தின் இனிய இல்லம்; புண்ணியத்தின் பெருங்கோட்டை.

9. ப்ரபுவே! ஸ்ரீரங்கத்தில் ஸர்வருக்கும் காணக்கிடக்கிற உன்னுடைய எந்தக் கல்யாண குணம்தான் இஹலோக வாழ்க்கையை விரும்புபவர்களுக்கும், வீடு பெற விரும்புகிறவர்களுக்கும், பகையை ஒழிக்க விரும்புகிறவர்களுக்கும் ஸங்கட ஸமயங்களில் வரும் பயத்தைப் போக்கிக் கை கொடுத்து உதவாமலிருக்கும்?

10. ஸ்வாமிந்! ஸம்ஸாரியான ஒவ்வொருவனும் உமது உபதேஶங்களான மருந்தின் கசப்புக் கண்டு பயப்படுகிறான். தவறான விஷயங்களின் சிற்றின்பம் கொண்டு தூண்டில் மாமிசம் போன்ற அவற்றில் ஆசை கொள்ளுகிறான். இவ்விதம் தனக்கு அஹிதமானவற்றை விடவும் மனமில்லாத அவனையும் உனது அன்புள்ள கருணை திடீரெனத் தோன்றி ரக்ஷிக்கிறது.

11. ரங்கநாதா! நீ ஆயுதம் முதலியன ஏந்துவது உன் திறத்தில் பயனற்றது. ஆயினும், எவ்விதப் பயமுமற்ற நீ அவற்றைப் பிடித்திருக்கிறாய், அதற்கு காரணம், 'உண்மையறிந்த பெரியோர்கள் எனது உயிர்' என்று நீ கூறியுள்ளாய், ஆக நீ அவர்களை அவற்றினால் காத்தல் உன்னையே நீ காத்துக் கொள்ளுவதாகிறது என்பதுதான்.

12. ப்ரபோ! உன்னை அநுபவிக்க ஆசை கொண்டவர்கள் சிற்றின்பத்தைத் தருவனவாகவும், முன்வினைப் பயனாக விளைந்தனவாகவும் இருக்கிற - மனைவி, மக்கள், ஸஹோதரர், சேவகர், சுற்றத்தார் மற்றும் ஸம்பந்திகள் - இவர்களாலும், செல்வம்

முதலியவற்றாலும் மகிழ்ச்சியடைவதில்லை. ஏன்? அவர்களும், அவையும் பிற்காலத்தில் மிக்க தொல்லை தருவதனால்.

13. திருவரங்கப் பெருமானே! நரகவாஸம், கர்ப்பவாஸம் முதலியவற்றின் கொடுமை சொல்லும் திறமன்று. நன்கு யோசித்தால், ரத்தமும் தோலும் நிறைந்த எமது உடலும் அத்தகையதே. உயர்ந்து விளங்கும் உன் திருநாட்டைவிட ஸுவர்க்கம் முதலியனவும் தாழ்ந்தவையே. ஆகையால் விவேகிக்கு இங்கு எதுதான் அச்சம் தராதது?

14. ரங்கராஜா! இவ்வுலகில் நல்லது தீயது என்று பகுக்கப்பட்ட எல்லாத் தேஶ, கால, வர்த்தமானங்களும் ஒன்று போல விவேகிக்குப் பயஹேதுக்களே என்று அச்சம் கொண்டிருக்கும் என்னிடம் நீ இரங்கவில்லையானால், பிறகு எனக்கு இரங்க வேறு யார் இருக்கிறார்கள்? உனக்குத்தான் உன் இரக்கத்தைக் கொள்ள வேறு யார் இருக்கிறார்கள்?

15. ஒரு முறை சரணமடைந்தவரை நீ எப்போதும் அபயமளித்துக் காக்கும் உறுதி பூண்டவன். சொன்ன சொல்லை மாற்றி இரண்டாம் தரம் பேசமாட்டாய் என்று உன் வார்த்தையாலேயே உலகத்தில் ப்ரஸித்தனாக இருக்கிறாய். நீ "சொன்னபடி செய்வான் ஒருவன்" என்பதை ராக்ஷஸர் முதலியவர்களும் அறிவார்கள். அத்தகைய உனது இயல்பு நொந்தவர்களில் முதல்வனான என்னிடம் மட்டில் வீணாகுமா என்ன?

16. ஸ்ரீரங்கநாயக! நிமிஷத்துக்கு நிமிஷம் கிளர்ந்தெழும் கடக்க முடியாத பாவக்கடலின் நடுவே, ஏதாகிலும் எப்போதாகிலும் ஒரு பிராயச்சித்தம் கிடைத்தால், அதுவும் அப்போது குறைகள் உள்ளதாகவே முடிகிறது. ஆகையால் இவ்விதம் மீட்சியற்ற என் விஷயத்தில், உன் ஸங்கல்பத்தினால் ஏதாவது ஓர் பிராயச்சித்தம் ஏற்பட்டிருந்தால் அதை விதித்தருளாய்.

17. கருணைக் கடலே! உலகினுக்கரசே! ரங்கபந்தோ! பாவம் செய்து கூடுபூரித்துக் கொண்டு நான், துக்கம் நிறைந்த துர்ஜயமான சிற்றின்பங்களிலிருந்து உனது ஸேவை அறுபடுமோ என்று ஸதா பயந்தே வாழ்கிறேன். ஆகையால் நீ, 'எனது இந்த அடியவனுக்கு நான் எப்போதும் துணை நிற்கிறேன்' என்று நிரூபித்துக் கொண்டு என்னை ரக்ஷிக்கக்கடவாய்.

18. ஜ்ஞாநாதி ஷட்குண மணியே! முன்வினையற்ற முதல்வனான உனக்கு இயல்பாகவே துன்பம் முதலியன இல்லை. ஆகையால் உலகை அழித்தல் முதலிய காரியங்கள் ஸ்ருஷ்ட்யாதிகள் போல

உனக்கு ஒரு விளையாட்டே தவிரத் துன்பம் போக்கச் செய்யும் செயலல்ல. ஆக, ஶரணாகதனைக் கைவிட்டால் உனக்கு ஏதும் துன்பம் வாராதாயினும், அவர்களோடு நட்பு முறிவதை ஸஹியாதவனாக இருக்கும் நீ என் இஷ்டத்தைத் தேடித்தரக்கடவாய்.

19. ரங்கநாத! ப்ர்ஹ்லாதாழ்வான், காகாஸுரன், கஜேந்திராழ்வான், த்ரௌபதி, விபீஷணாழ்வான், காளிய ஸர்ப்பம், கோபிமார்கள், அம்பரீஷ மஹாராஜர் போன்ற உமது அடி அடைந்தோர்கள் எப்படி அடிநாளில் பயம்கெட்டுப் பயன் பெற்றார்களோ அப்படியே இப்போதும், உடனே நாங்களும், உன்னால் பயநிவ்ருத்தி பெறுவோமாக.

20. ப்ரபோ! முகுந்தா! திருவரங்கத்தில் பரமைகாந்திகளுக்கு நேர்ந்துள்ள பயத்தை நீக்க வேண்டும். ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயை வளர்த்தருள். அடியார்களின் விரோதியைப் போக்கு, ஸ்வயம்வ்யக்தமான உனது அழகிய மணவாளன் திருக்கோலத்தை நாங்கள் எப்போதும் ஸேவித்து இங்கேயே நித்ய ஸூரிகளின் ஆனந்தத்தை அடையக்கடவோம்.

21. பிராட்டியின் மணாளனாகவும், அடியார்களின் ரக்ஷகனாகவும், உண்மையான அத்புத குணராசியாகவும் உள்ள உன்னிடத்தில் இவ்வாறு இந்தப் பொறுப்பு ஸமர்ப்பிக்கப் பெற்றது. இனிமேல் திருவரங்கத் திருப்பதி முதலிய க்ஷேத்திரங்களில் கணந்தோறும் மிகவும் ஜவலிக்கிற உன்திவ்யாயுதங்களால் இயற்கையான உனது அதிகாரத்தைச் செலுத்தக்கடவாய்.

22. அரங்கத்தரசே! கலிபுருஷனுக்கு ஒப்பானவரும், பாஷண்டிகள், நாஸ்திகர் முதலியவர்களோடு கூட்டுறவு கொண்டவரும் ஆன ம்லேச்சர் முதலியவர்களாலே இப்போது உலகில் உண்டாகியிருக்கிற பயத்தை, உயர்ந்த ஶக்தியுள்ளவையும், வேதோத்தமர்களான ப்ராஹ்மணர்களைக் காப்பவையுமான உன் ஐம்படைகளாலே உடனே ஒரு நொடியில் போக்குவாய்.

23. ப்ரபோ! விரோதிகளை ஒழிப்பதில் நெருப்பும், சந்திரனும், ஸூர்யனும் ஆகிய மூன்று தேஜஸ்ஸும் கூடியது போல் நிற்பதாகவும், இருளை ஒழிப்பதாகவும், மற்ற ஆயுதங்கள் கூடினதாகவும், தன் அதீனமான தேவர்களின் வாழ்க்கையை யுடையதாவும் உள்ள திருவாழியாழ்வான் உன் க்ஷேத்திரமாகிய திருவரங்கப் பெருநகரில் தர்மசக்ரம் சுழலும்படி செய்யவேண்டும்.

24. உயர்நலமுடைய உத்தமனே! மநு முதலியோரால் பூஜிக்கப்பெற்ற திருவரங்கப் பெருநகரில், அரக்கரினும் கொடிய

பகைவர்களாலே இப்போது உண்டாகியிருக்கும் பயத்தை, பெரிய பிராட்டியாரும் பூமிப் பிராட்டியாரும் ஊக்குவிக்க, கடல்போன்ற கருணை சுரக்க, உன் ஶக்தியாலே நீயே போக்கியருள வேண்டும்.

25. ஸ்வாமிந்! நினைக்கவும் அரிய ஶக்தியுடையவர்களாயும், உன்னைப் போலவே திருவரங்கத்தைக் காப்பவர்களாயும், 'ஜிதம் தே புண்டரீகாக்ஷ! (செந்தாமரைக்கண்ணா! உனக்கே வெற்றி)' என்று உன்னை வாழ்த்துகிறவர்களாவும் ஆன திருவனந்தாழ்வான், பெரிய திருவடி, ஸேனை முதலியார், அப்படியே குமுத குமுதாக்ஷாதிகள், திருநகர் திருக்கோபுரம் திருவாயில் காப்பாளர்கள் முதலியோர் ஜகத்தை அநுக்ரஹிப்பதில் விழிப்புடன் இருக்கட்டும்.

26. தலைவா! ப்ரஹ்மாவும், ஶிவனும், இந்திரனும், அக்னியும், யமன் முதலியவர்களும் உன் எதிரிகளைக் காக்க ஶக்தி லேஶமும் அற்றவர்கள். நீ, ஒருவனைக் காக்க விரும்பினால் எவரிடமிருந்தும் ஏதும் பயம் பிறவாது. ஆகையால் நீ எங்கள் விரோதிகளை ஸ்ரீரங்காதி க்ஷேத்திரங்களிலிருந்து விரட்டுவாயாக.

27. த்ரிவிக்ரம! கைடபன் என்ற இருளுக்கு ரவியாகவும், மது என்னும் தூசுக்குப் பெருங்காற்றாகவும், ஹிரண்யன் என்னும் மலைக்கு உளியாகவும், காலநேமி என்னும் மரத்தைப் பிளந்ததாகவும் - பல சொல்லி என்ன? - அடியார்களின் அல்லலை எல்லாம் போக்குவதாகவும் இருக்கிற உன் விக்கிரமச் செய்கை ஸ்ரீரங்கத்து விரோதிகளை நொடியில் ஒழிக்கட்டும்.

28. எம்பெருமானார் ஸ்ரீஸூக்தி ரஸாநுபவங்களால் என் காலம் ஸுகமே கழிந்துவிட்டது. தலை எங்கும் நரையும் கண்டது. ஆயினும் ஒன்று உன்னை வேண்டுகிறேன். ஹே ப்ரபோ! பகைவர் எல்லாரும் ஓடிப்போய், திருவரங்கம் போன்ற ஏதேனும் உகந்தருளின நிலங்களிலே ஒருவருக்கு ஒருவர் ஹிதம் செய்து கொள்ளும் ஸ்ரீ வைஷ்ணவர்களின் திரளிலே என்னை வைத்தருள வேண்டும்.

29. சிறந்த ஸம்ப்ரதாய ஆசார்யர்களின் கடாக்ஷம் பெற்றுப் பிரஸித்தரான ஸ்ரீவேங்கடேஶ கவியினிடமிருந்து தோன்றிய இந்த ஸ்ரீரங்கபதியின் ஸ்துதியை பயம்கெட்டு வாழ வேண்டுவதற்காகப் படியுங்கள். அப்போது, இயற்கையிலேயே இரக்கம் கொண்ட எம்பெருமான் தன் குணங்கள் கொண்டு, 'பயப்படாதீர்கள். நலம் உங்களுக்கு உண்டாகும்' என்று கூறிக்கொண்டே உங்களை ரக்ஷிப்பான்.

|| ஶுபமஸ்து ||

25வது பட்ட அழகியசிங்கர் விஷயமான தனியன்

ஸ்ரீவாஸ வீரரகுவர்ய பராங்குஶாதி
ராமாநுஜார்யமுநிபிர் குருஸார்வ பௌமை: |
ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பர்பூர்ணபோதம்
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதிஶேகர மாஶ்ரயாம: ||

ஶாபாநுக்ரஹ ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம் 25வது பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கர்
ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேஶிகன்
பஞ்சப்ருந்தாவனம், ந்ருஸிம்ஹபுரம், கும்பகோணம்

அடியவர் ஶாபங்களை அநுக்ரஹமாக மாற்றி
அருள்புரியும் ஸ்ரீகருடாம்ஶ ஆசார்யன்

வடிவமைப்பு : மஹாமதி க்ராபிக்ஸ், சென்னை-15. Ph : 9840 290 883



ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் ஸந்நிதி
ராமகிருஷ்ணாபுரம், முத்தியால்பேட்டை, புதுச்சேரி-3.

Printed by Sri Mahalakshmi & Co., Cell:94441 58817



ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிய

ஸ்ரீ அபீதிஸ்தவம்

மஹாவித்வான் வில்லிவலம் ஸ்ரீ நாராயணாச்சார் ஸ்வாமி ஸாதித்த
விளக்கவுரையுடன்